**செய்தி வெளியீடு எண்: 073** **நாள்: 29.01.2019**

## <u>செய்தி வெளியீடு</u>

## <u>அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையம்</u>

மத்திய தேர்வாணையம் (UPSC) குடிமைப் பணிகளுக்காக (Civil Services) நடத்தும் ஆளுமைத் தேர்வை (Personality Test-2018) தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் வகையில் முதன்மை தேர்வில் தகுதி பெற்ற தமிழ் நாட்டை சார்ந்த மாணவ/மாணவியர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையத்தில் மாதிரி ஆளுமைத் தேர்வு **19.01.2019** மற்றும் **20.1.2019** ஆகிய நாட்களில் நடத்தப்பட்டன. இதன் தொடர்ச்சியாக வருகிற **பிப்ரவரி 9**–ஆம் தேதி இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல் பணி, இந்திய வருவாய் பணி அலுவலர்களையும் கல்லூரிப் பேராசிரியர்களையும் கொண்டு குழு அமைக்கப்பட்டு மாதிரி ஆளுமைத் தேர்வும் நடைபெற உள்ளது. **09.02.2019** அன்று நடைபெறும் மாதிரி ஆளுமைத் தேர்வில் கலந்துகொள்வதற்கு மூன்று புகைப்படங்களுடன், மத்திய தேர்வாணைக் குழு முதன்மைத் தேர்வுக்கு விண்ணப்பித்த விண்ணப்ப நகலுடன், தங்களது பெயரையும் மற்ற விவரங்களையும் அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையம், ‘’காஞ்சி, **163/1**, பி.எஸ் குமாரசாமி ராஜா சாலை ,(கிரீன்வேஸ் ரோடு) சென்னை **600 028** –ல் பதிவு செய்து விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி எண்கள் **044–24621909, 044–24621475** விண்ணப்பப் படிவம் பயிற்சி மைய இணையதளத்தில் www.civilservicecoaching.com பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து மேற்குறித்த அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம். ஏற்கனவே **19.01.2019** மற்றும் **20.1.2019** ஆகிய நாட்களில் நடைபெற்ற மாதிரி ஆளுமைத் தேர்வில் கலந்து கொண்ட மாணவ/மாணவியர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

ஆளுமைத்தேர்வுக்கு புதுடெல்லி செல்லும் மாணவ/மாணவியர்களுக்கு பயணப்படியாக ரூ. **2000/–**ம் பத்து நாட்கள் தமிழ்நாடு இல்லத்தில் தங்கி ஆளுமைத் தேர்வில் கலந்து கொள்ள ஏற்பாடுகளும் இப்பயிற்சி மையத்தால் செய்யப்பட்டு வருகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**